இறைவன் மதுவிலக்கை ஏன் அமுல்படுத்தவில்லை?

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

THIRU QURAN NARCHEYDHI MALAR -2014 NOV

மலர்: 8 இதழ்: 2 நவம்பர் 2014 விலை: ரூ. 5



## மது – தீமைகளின் தாய்!

## மதுவை ஒழிக்க நடைமுறைத் தீர்வு

# நாட்டுக்கு இது இருண்ட காலம்!

தமிழக மக்கள்தொகையான ஏழு கோடியில் குடிநோயால் பாதிக்கப்பட்டவர்கள் சுமார் ஒரு கோடிப் பேர் என்கிறது புள்ளிவிவரம். மற்ற மாநிலங்களும் இதற்கு சளைத்தவை அல்ல என்றறிவோம். ஆனால், குடிநோயாளிகள் அந்த ஒரு கோடிப் பேர் மட்டும்தானா? குடிநோய் என்பது குடும்ப நோய், சமூக நோய். குடிநோயாளிகளின் எண்ணிக்கையைக் குடிநோயாளிகளை மட்டும் கொண்டு கணக்கிடக் கூடாது. குடிநோயாளிகளால் பாதிக்கப்படும் நபர்களையும் சேர்த்தே கணக்கிட வேண்டும்.
ஒரு நபர் குடிப்பதால், பாதிக்கப்படுவது அவர் மட்டுமல்லை.... அவரது பெற்றோர், மனைவி, குழந்தைகள் என சங்கிலித்தொடர் போல பலரும் பாதிக்கப்படுகின்றனர் அவரோடு தொடர்பு கொண்ட பலரும் மனரீதியாக, உடல்ரீதியாக, பொருளாதாரரீதியாக, சமூகரீதியாக பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

● எங்கே தனது மகன் குடித்தே செத்துவிடுவானோ என்று பெற்றோர் கலங்குகின்றனர். எப்போது சித்ரவதை ஆரம்பிக்கும் என்று பயத்துடன் காத்திருக்கிறார் மனைவி. அப்பா எப்போது கொஞ்சுவார்? எப்போது திட்டுவார் என்று தெரியாமல் திகைக்கின்றன குழந்தைகள். ஒரு நாள், ஒரு மாதம் அல்லது சில மாதங்கள் இப்படியான தவிப்பு, மன உளைச்சல் இருந்தால் தாங்கிக்கொள்ளலாம். ஆனால், அது வருடக் கணக்கில் நீடித்த தவிப்பாக மாறும்போது... மனநோயாக மாறாதா?

● மதுபோதையில் நடக்கும் அசம்பாவித சம்பவங்கள் செய்தித்தாள்களில் இடம்பெறாத நாட்களே இல்லை. சாலை விபத்துகள் அதிகம் நடக்கும் மாநிலங்களில் முதல் இடத்தில் இருக்கிறது தமிழகம். கடந்த 2013-ம் ஆண்டு நடந்த 14,504 விபத்துகளில் 15,563 பேர் பலியாகியிருக்கிறார்கள். இதில் 70சூ மதுபோதையால் நடந்த விபத்துகள். குறிப்பாக, 2002 முதல் 2012-ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் தமிழகம் மிக மோசமாக மதுபோதை விபத்துகளால் பாதிக்கப்பட்டது என்கிறது மேலாண்மை மற்றும் தொழில்நுட்பத்துக்கான பன்னாட்டு ஆய்விதழ். இதுமட்டுமல்ல, 2013-ம் ஆண்டு மட்டும் மதுவருந்திய போதை ஓட்டுநர்களால் தமிழகத்தில் 718 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்கிறது மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுச்சாலைத் துறை அமைச்சகத்தின் புள்ளிவிவரம் ஒன்று.

என்ன நடக்கிறது இங்கே? யார் காரணம் இதற்கெல்லாம்?

மதுவின் பிடியிலிருந்து நம் நாட்டை மீட்க என்ன செய்யப்போகிறோம் நாம்?

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

THIRU QURAN NARCHEYDHI MALAR -2014 NOV

மலர்: 8 இதழ்: 2 நவம்பர் 2014 விலை: ரூ. 5

## பொருளடக்கம்

குடி கெடுத்த குடிகள் 2
மதுவைத் தடுக்காத அரசாங்கங்கள் 4
வரலாறு படைக்கும் டாஸ்மாக் 5
மது உள்ளே நுழைந்தால் என்ன நடக்கிறது? 7
மதுவை ஒழிக்க நடைமுறைத் தீர்வு 8
மாமனிதர் மது ஒழித்த வரலாறு 11
இறைவன் மதுவிலக்கை ஏன்
அமுல்படுத்தவில்லை? 14
போதைப்பொருள் பயன்பாடு பெரும்பாவம் 17
இறைவன் ஏன் பரீட்சிக்கிறான்? 18
மது மருந்தாகுமா? 20
மனமாற்றமும் குணமாற்றமுமே இஸ்லாம் 21
காத்திருக்கும் மண்ணறையும் மறுமையும் 23

published from
**House of Peace,**
PO Box No.1726
# 8, 4th main, 2nd cross, LB Sastry Nagar,
Bangalore 560 017 - Ph. 9886001357

# குடி கெடுத்த குடிகள் !

குடி குடியைக் கெடுக்குமாம்! எவ்வளவு அழகாக எழதி வைத்திருக்கிறார்கள்! அதை எழுதிவைத்துவிட்டு தப்பித்துக் கொள்ளும் பொறுப்பற்ற அரசாங்கங்கள்! அவர்களையே மீண்டும்மீண்டும் தேர்ந்தெடுத்து ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி அழகு பார்க்கும் ஏமாளிப் பொதுமக்கள்! பொதுமக்கள் என்றால் இதை எழுதும் நானும் இதைப் படிக்கும் நீங்களும் உட்படத்தான்....! எங்கே ஏமாறுகிறோம் நாம்?

உதாரணம் காட்ட எண்ணற்றவை இருந்தாலும் சமீபத்தில் பத்திரிகையில் வந்த ஓரிரண்டை மட்டும் இங்கு காண்போம்.....

## குடிநோயாளி தாஸ்!

சென்னை சிந்தாதிரிப்பேட்டை கூவம் கரை குடிசைவாசிகள் யாரைக் கேட்டாலும் தாஸின் வீட்டைக் கைகாட்டுவார்கள்.

"யாரு? குடிச்சிக் குடிச்சே செத்துப்போச்சே அது வீடா?"

வாசலில் மண்ணெண்ணெய் பம்ப் ஸ்டவ்வில் சமைத்துக் கொண்டிருந்தார் புஷ்பா, தாஸின் மனைவி.

"வாங்க சார்! உட்காருங்க" என்று காலி குண்டான் ஒன்றைக் கவிழ்த்து இருக்கையாக வைத்தார்.

வீட்டுக்குள் எட்டிப் பார்த்தேன். அதை வீடு என்று சொல்ல முடியாது. நான்கு புறமும் கையை நீட்டினால் சுவர் இடிக்கும். மேலே லேசாகத் தலையும் தட்டக்கூடும்.

என் பார்வையைப் புரிந்துகொண்டவர், "என்ன சார் பண்றது? வாசல்ல படுக்கலாம்னா காவா தண்ணி நிக்குது. சின்னவளை என் மார்ல போட்டுக்கிட்டு நாலு பேரும் நெருக்கியடிச்சுப் படுத்துக்குறோம்" என்றவர், கண் கலங்கியவராய், "அது மட்டும் ஒழுங்கா இருந்திருந்துச்சுன்னா, இப்பிடி நாதியில்லாம நிப்போமா? குடிச்சுக் குடிச்சுப் பைத்தியம் முத்தியில்ல செத்துச்சு. அது பூடுச்சு. நாங்கதான் நெதம் சாவறோம்..." தாங்க மாட்டாமல் அழுகிறார். பெரிய பொண்ணும் சேர்ந்து அழுகிறது.

நான்கு ஆண்டுக்கு முன்பு பார்த்தது. குழந்தைகள் வளர்ந்திருந்தார்கள். பெரியவள் கமலி, ஒன்பதாவது படிக்கிறாள். அடுத்தவள் தமிழ் அழகி, ஆறாவது படிக்கிறாள். மூன்றாமவள் கனிமொழி, இரண்டாம் வகுப்பு. கடைக்குட்டி விசாலாட்சி பால்வாடிக்குச் செல்கிறாள். குழந்தைகளுக்கு அழகான பெயர்களை வைத்திருக்கிறார் தாஸ்.

தாஸுக்குச் சுமார் ஐந்து ஆண்டுகளாகத் தொடர்ந்த குடிப் பழக்கம் இருந்தது. கடைசி இரு ஆண்டுகள் அவர் மிகவும் முற்றிய குடிநோயாளியாகவும் மனநோயாளியாகவும் ஆகிவிட்டார்.

**நாசமாப்போன டாஸ்மாக்**

தாஸுக்குக் குடிநோயும் மனநோயும் முற்றிய நிலையில், சில நாட்களாக வீட்டிலேயே வைத்திருந்தார்கள். காலையில் கண் விழித்ததும் அவருக்கு ஆஃப் பாட்டில் மது முழுதாக வேண்டும். காலையில் குடிக்கவில்லை என்றால் கட்டுப்படுத்த முடியாத கலவரம்தான். தினமும் 200 ரூபாய் கொடுத்து மது வாங்க என்ன செய்வார் புஷ்பா? வேறு வழியில்லாமல் வீட்டில் பூட்டிவைத்திருந்தார். இரண்டு நாட்களாக "கதவைத் தொறடி. நான் சாகணும். அவன் திட்டறான். கதவைத் தொறடி..." என்று கத்திக்கொண்டிருந்தவர், மூன்றாம் நாள் அதிகாலையில் கதவை உடைத்துக்கொண்டு ஓடிப்போய் கூவத்தில் குதித்துத் தற்கொலை செய்துகொண்டார். 14 வயதில் தொடங்கிய புஷ்பாவின் திருமண வாழ்க்கை, அவரது 27 வயதிலேயே முடிவுக்கு வந்துவிட்டது. 'விதி' என்கிறார் புஷ்பா.

இப்போது பிழைப்புக்கு என்ன செய்கிறார் புஷ்பா?

"மூணு வீடுகளுக்கு வேலைக்குப் போறன் சார். மூவாயிரம் ரூவா வருது. புள்ளைங்களைப் படிக்க வெச்சிரணும்னு வைராக்கியமா இருக்கேன். சார், ஒரு வீட்டுக்கு மட்டும் எதானா உதவி செய்யுங்க. மூத்தவ வயசுக்கு வந்துட்டா. புள்ளையால, வாசல்ல வெச்சுக் குளிக்க முடியலை" - அதற்கு மேல் அவரால் பேச முடியவில்லை. வாயைப் பொத்திக்கொள்கிறார்.

இப்படி ஒரு தாஸ் மட்டும் அல்ல, ஆயிரக் கணக்கில் செத்துக்கொண்டிருக்கிறார்கள். நான் சொல்வதில் சந்தேகம் இருந்தால், ஒரு எட்டு நாலைந்து டாஸ்மாக் கடைகளுக்குச் சென்று பாருங்கள். தனியாக யாரையோ திட்டிக்கொண்டும் பேசிக்கொண்டும் நின்றிருப்பார்கள் அநேக தாஸ்கள், நாளைய அனாதைப் பிணங்கள்!

---

# காஞ்சனா எப்படி மனநோயாளி ஆனார்?

காஞ்சனா மிகவும் ஏழ்மையான சூழலில் இருந்த அவரை குடிநோயாளிக்குக் கட்டி வைத்துவிட்டார்கள். மணவறைக்கு வரும்போதே மாப்பிள்ளைக்கு மப்பு. தினமும் அடி, உதை. குறைந்தபட்சம் தாம்பத்தியத்தில்கூட இயல்பாகக் கிடைக்க வேண்டிய சுகம் அவருக்குக் கிடைக்கவில்லை. கொடூரமான, இயற்கைக்கு முரணான தாம்பத்தியம். கூடவே சந்தேகம். நடுவே இரண்டு குழந்தைகள். கணவன் வீட்டுக்கு வந்தாலே அவருக்கு நடுக்கம் எடுக்க ஆரம்பித்துவிட்டது.

**கணவனை நினைத்தாலே பயம்**

ஒருகட்டத்தில் கணவனை நேரில் கண்டால்தான் நடுக்கம் என்பது மாறி, கணவனை நினைக்கும்போதெல்லாம் நடுக்கம் ஏற்பட்டது. நடுக்கத்தைக் கட்டுப்படுத்த துணிகளை எடுத்துக் கைகால்களை இறுகக் கட்டிக்கொண்டார்.

அழுக்குத் துணி மூட்டைக்குள் ஒளிந்துகொண்டார். இருட்டு மூலையில் பதுங்கினார். கண் விழிக்கப் பயம், பல் விளக்கப் பயம், குளிக்கப் பயம், சாப்பிடப் பயம். மனநலம் மொத்தமாகப் பாதிக்கப்பட்டுவிட்டது. கடைசியில், பேய் பிடித்துவிட்டது என்று காஞ்சனாவை விரட்டிவிட்டார் கணவர்.

இறுதியில் காஞ்சனாவின் வயதான தந்தையும் ஊர்க்காரர்கள் சிலரும் அவரை மனநோய் மருத்துவமனையில் கொண்டுவந்து சேர்த்தனர். மூன்று மாதங்களாக சிகிச்சையில் தேறிவருகிறார். ஆனாலும், கொஞ்சம் கூச்சல், அதிகச் சத்தம் கேட்டாலும் கட்டிலுக்கு அடியில் ஒளிந்துகொள்கிறார் அவர்.

**(நன்றி: - டி.எல். சஞ்சீவிகுமார், தி இந்து நாளிதழ்)**

# மதுவைத் தடுக்காத அரசாங்கங்கள்

- தமிழர்களாலும், தமிழகத்தை அரசாண்ட தலைவர்களாலும் பெரிதும் மதிக்கப்படும் வள்ளுவரும் மதுவின் கொடுமையறிந்தே ““கள்ளுண்ணாமை““ என்றாற அதிகாரத்தையும் இயற்றியிருக்கிறார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே.
- மது அருந்தும் பழக்கத்தின் கொடுமையை அறிந்து காந்தியடிகள் மதுவிலக்கை ஒரு கொள்கையாகவே கருதினார். 1906 ம் ஆண்டு கள்ளுக்கடை மறியலையும் தொடங்கினார்.
- அவரை பின்பற்றி தேசத்தின் பல தலைவர்களும் பல இடங்களில் மதுவிலக்குப்பற்றி முழக்கமிட்டனர்.
- தமிழகத்தில் இராஜாஜி அவர்கள் முழு மதுவிலக்கை அமல்படுத்தினார் தந்தை பெரியாரும் மதுவிலக்கை ஆதரித்தார்.
- மதுவின் கொடுமையை அன்று முதல் இன்றுவரை பல சான்றோர்கள் கூறிவருகிறார்கள். சிறிதளவு சிந்திப்பவர்கள் கூட மதுவின் தீமைகளை அறிந்தே வைத்துள்ளனர்.

ஆனால், இன்று மீண்டும் மது நாட்டிற்குள் புகுந்து சமுதாயத்தை சீரழித்துவிட்டது இதனால் நாட்டின் எதிர்காலம் நிச்சயம் பாதிக்கப்படும் என்பது மட்டும் உண்மை.

இன்றைக்கு செய்திதாள்களை எடுத்துக்கொண்டால் நாள்தோறும் வரக்கூடிய செய்திகள்,

- பள்ளி மாணவர்களிடையே அதிகரிக்கும் மதுப்பழக்கம்.
- கிராமத்து பெண்களிடையே குடிப்பழக்கம் அதிகரிப்பு.
- குடிப்பதற்கு பணம் தராத மகன் குத்திக்கொலை.
- டாஸ்மாக் கடைகளில் கல்லூரி மாணவர்கள் கூட்டம்.
- குடித்துவிட்டு வாகனம் ஓட்டியதால் விபத்து பலர் மரணம்.
- குடி போதையில் இளைஞர் தற்கொலை.

இது போன்ற செய்திகள் வராத ஊடகங்களே இல்லை எனலாம்.

நாட்டு மக்களின் நலனும் பாதுகாப்புமே அரசாங்கங்களின் தலையாய நோக்கம். முக்கியமாக மக்களுக்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு அமைக்கப்பட்ட மக்களாட்சி அரசாங்கங்கள் இந்த மாபெரும் தீமையைத் தடுக்காமல் போவது ஆச்சரியத்திலும் ஆச்சரியமே!

மனித சமூகத்தை அச்சுறுத்திக்கொண்டிருக்கும் தீமைகளில் மதுவுக்கே முதலிடம் என்பதில் சந்தேகமேயில்லை. அதன்மூலம் தனிமனிதன், குடும்பம், சமூகம் எண்ணற்ற துயரங்களை சந்தித்து வருவதை அன்றாடம் பார்த்துவருகிறோம். படித்து வருகிறோம். அதை ஒழித்துக்கட்டி, ஆரோக்கியமான, நிம்மதியான ஒரு சமூகத்தை கட்டமைக்க கடமைப்பட்ட அரசுகள் மதுவை மேலும் ஊக்கப்படுத்தும் வேலைகளையே தொடர்ந்து செய்து வருவதை பார்க்கிறோம். அதன் மூலம் அரசு அடைந்து வரும் இலாபமே அதற்கு பிரதான காரணமாகும்.

## வரலாறு படைக்கும் டாஸ்மாக்

● 2003-ம் ஆண்டு டாஸ்மாக் மூலம், அரசு நேரடியாக மது விற்பனையை துவங்கிய நாள் முதல் ஆண்டுக்கு ஆண்டு விற்பனையில் புதிய வரலாறு படைக்கப்பட்டு வருகிறது. டாஸ்மாக் விற்பனை துவங்கிய, 2003 நிதியாண்டில், ரூ 3,500 கோடியாக இருந்த விற்பனை, 2012-13 நிதியாண்டில் ரூ 21,680 கோடியாக உயர்ந்துள்ளது. இன்று தமிழ்நாடு முழுவதும் 6,800 டாஸ்மாக் மதுபான கடைகள் உள்ளன.

● துவக்கப்பட்ட காலம் முதல், 2010 வரை சராசரியாக ஆண்டுக்கு 1,500 கோடி ரூபாய் வரை விற்பனை அதிகரித்து வந்த நிலையில், 2012 நிதியாண்டில் மட்டும் 5,000 கோடி ரூபாய் வரை அதிகரித்துள்ளது. சில பத்தாண்டுகளுக்கு முன்பு வரை குடிப்பவர்கள் அதிகமாக இருந்ததாக கணக்கிடப்பட்ட கேரளத்தில் கூட “சரக்கினால்” அரசு ஈட்டிய ஆண்டு வருவாய் ரூ 8,000 கோடி மட்டுமே.

● இந்நிலையில் 2012-ம் ஆண்டின் மது விற்பனை இலக்காக ரூ 25,000 கோடியை நிர்ணயித்து டாஸ்மாக் மாவட்ட மேலாளர்களுக்கு வாய்மொழியாக உத்தரவிட்டது தமிழக அரசு. அதையடுத்து ஒவ்வொரு மாவட்டத்துக்கும் தனித்தனியான இலக்குகள் நிர்ணயிக்கப்பட மாவட்ட நிர்வாகமும் ஒவ்வொரு கடைக்கும் தனித்தனி இலக்குகளை நிர்ணயித்திருந்தன. அதில் இலக்கை பூர்த்தி செய்யாத சூப்பர்வைசர்கள் 242 பேரை, இடைக்கால பணி நீக்கம் செய்து உத்தரவிட்டது தமிழக அரசு.

## டாஸ்மாக் விற்பனை இலக்கு

இந்த விற்பனை இலக்கின் காரணமாக டாஸ்மாக் கடைகளின் பார்களில் 24 மணிநேரமும் பிளாக்கில் எல்லா சரக்குகளும் தங்கு தடையின்றி கிடைக்கின்றன. பார்களில் அதிக விலை வைத்து விற்பதால் கிடைக்கும் பணம் போலிஸ், அதிகார வர்க்கம், உள்ளூர் அரசியல் ரவுடிகளுக்கிடையில்

பங்கு பிரித்துக்கொள்ளப்படுகிறது.

இன்று பெரும்பாலான உழைக்கும் மக்கள் வசிக்கும் பகுதிகளில் ஆண்கள் சராசரியாக 45 வயதுக்குள் மரணமடைந்து விடுகின்றனர். கடும் உடலுழைப்பில் ஈடுபடும் தொழிலாளர்கள் உடல் வலியை மறக்க குடிக்க ஆரம்பித்து பின்னர் வேலை செய்யவே குடிக்க வேண்டும் என்ற நிலைக்குள்ளாகி உடல் வலிமையை இழந்து கடைசியில் உயிரையே இழக்கின்றனர். இம்மாதிரியான உயிரிழப்புகள் தற்கொலை அல்லது விபத்து வகைப்படுத்தல்களின் கீழ் பதிவு செய்யப்படுவதில்லை.

இது ஒரு புறமென்றால் மறுபுறம் சில பத்தாண்டுகளுக்கு முன்பு வரை தவறாக இருந்த குடிப்பழக்கம் இன்றைய நுகர்வு கலச்சாரத்தில் குடிப்பது ஆண்மைக்குரிய லட்சணமாகவும், இன்பம் துய்க்கும் அடையாளமாகவும் மாறியிருப்பதுடன் மொத்த சமூகமும் குடிப்பதை சகித்துக் கொள்ள பழகியிருக்கிறது இதனால், மதுவுக்கு அடிமையாகும் இளைஞர்கள் சாலை விபத்துகளில் உயிரிழப்பது அதிகரித்துள்ளது.

## குற்றங்கள் விபத்துகளில் சாதனை!

● அண்மையில் தேசிய குற்றப்பதிவு ஆணையம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களின் படி நாட்டிலேயே அதிகமான தற்கொலைகள் நடந்த மாநிலங்களின் பட்டியலில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. 2002-ம் ஆண்டு 11,244 பேராக இருந்த தற்கொலை செய்து கொண்டோர் எண்ணிக்கை 50 சதவீதத்திற்கும் மேல் அதிகரித்துள்ளது. 2012-ம் ஆண்டில் மட்டும் 16,927 தற்கொலைகள் பதிவாகியுள்ளன. தன்னைத்தானே தீயிட்டுக்கொண்டோர் எண்ணிக்கையிலும் (2,349) தமிழகமே முதலிடம் வகிக்கிறது.

● தேசிய குற்றப்பதிவு ஆணையம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களின் படி நாட்டிலேயே அதிகமான விபத்துகள் நடந்த மாநிலங்களின் பட்டியலிலும் கூட தமிழகம் முதலிடத்தில் உள்ளது. 2012-ம் ஆண்டில் மட்டும் தமிழகத்தில் 67757 சாலை விபத்துக்கள் நடந்து 16,175 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

தற்கொலைகள், விபத்துகள் மட்டுமின்றி குடியால் ஏற்படும் இதர உயிரிழப்புகளையும் கணக்கில் கொண்டால் குடி என்பது நம்முடைய உழைப்பை சுரண்டி நம் மனதையே அடிமைப்படுத்துவதுடன் மக்களுடைய உயிரை கொத்து கொத்தாக கொன்றழிக்கும் கொலைகார சக்தியாகவும் உள்ளது.

ஆனால் இப்படி சமூகத்தை குடிக்கு அடிமைப்படுத்தி, வேலை நிலைமைகளில் சுரண்டி வதக்கி, அரசுக்கு வருமானம் பார்த்து, மக்களை சாலை விபத்துக்களில் கொன்று, மற்றவர்களை தற்கொலை செய்ய வைத்து வருகிறது இந்த அரசு. எந்தக் கட்சி தேர்தல் வெற்றி பெற்றாலும் இதுதான் நிலைமை. இந்நிலையில் நாட்டின் வருவாயை விட நாட்டுநலனே முக்கியம் என்று கூறி மதுவிலக்கை அமுல்படுத்திய கேரளா அரசை பாராட்டியே ஆகவேண்டும். இறைவன் அவர்களுக்கு அருள்செய்வானாக!




# மது உள்ளே நுழைந்தால் என்ன நடக்கிறது?

ஒருவரின் மூளைக்குள் மது சென்றவுடன் அது, ‘டெட் ராஹைட் ரோஜசோகுயினோலின்’ ***(Tetrahydroisoquinoline)*** என்கிற வேதிப்பொருளாக மாறுகிறது. இது மொத்த மூளையையும் கட்டுப்பாடு இழக்கச் செய்கிறது. ஒருவர் அதிகமாக மது அருந்துவதால் அல்லது அவசரமாகக் குறைந்த நிமிடங்களில் ஒரே மூச்சாக அதிக அளவு மது அருந்துவதால் மிதமிஞ்சிய போதை ஏற்படுகிறது.

அப்போது சிறுமூளை பெருமூளையின் கட்டளைக்குக் கீழ்படிவதில்லை. அல்லது பெருமூளை சிறுமூளையைக் கட்டுப்படுத்தும் தன்மையை இழக்கிறது. ‘என்னை யார் கேட்பது? எது நடந்தாலும் பார்த்துக்கொள்ளலாம்’, ‘என்னதான் ஆகிவிடும் பார்ப்போமே’ என்கிற பயங்கர, அதீத எதிர்மறை உணர்ச்சி நிலை மேலோங்கும். பக்கத்தில் இருப்பவர் என்ன சொன்னாலும் கேட்க மாட்டார்கள். சுயமாகவும் கட்டுப்படுத்திக்கொள்ள முடியாது. வெறிபிடித்த மனநிலை அது. கொண்டாட்டமும் வெறுப்பின் உச்சமும் சோகங்களும் கைகோத்த வன்முறை மனநிலை அது. எங்கேயோ வாங்கிய அடிக்கு யாரையோ பழிவாங்க நினைக்கத் துடிக்கும் மனநிலை அது. இயல்புக்கு மாறாக, பயங்கரமாக ஒன்றை நிகழ்த்தாமல் ஓயாது அது. நடுவே மயக்கம் அடைந்து ஓய்ந்தால்தான் உண்டு. அப்போது நடப்பவைதான் இதுபோன்ற விபத்துரீதியிலான கொலைகள், கூட்டுப் பாலியல் வன்முறைகள், இன்னபிற. அதாவது, திட்டமிட்டு நடத்தியிருக்க மாட்டார்கள். ஆனால், மதுவின் ‘மிதமிஞ்சிய ஆதிக்கம்’ அவர்களை அப்படிச் செய்ய வைத்திருக்கும்.

# நபிகளாரின் பிரார்த்தனை

இறைவா! உன்னிடம் நான் நரகத்தின் சோதனையிலிருந்தும், நரகத்தின் வேதனையிலிருந்தும், மண்ணறையின் சோதனையிலிருந்தும், மண்ணறையின் வேதனையிலிருந்தும், செல்வச் சோதனையின் தீமையிலிருந்தும், வறுமைச் சோதனையின் தீமையிலிருந்தும், வறுமைச் சோதனையின் தீமையிலிருந்தும் பாதுகாப்புக் கோருகிறேன். ...... உன்னிடம் நான் சோம்பலிலிருந்தும், பாவத்திலிருந்தும் கடனிலிலிருந்தும் பாதுகாப்புக் கோருகிறேன். (புகாரி :6377)

**ஆசிரியர் உரை**

# மது ஒழிப்புக்கு நடைமுறை சாத்தியமான தீர்வு

மது மற்றும் போதைப்பொருட்களின் ஆதிக்கம் குடும்பங்களின் அமைதியையும் சமூக அமைதியையும் சீர்குலைத்து வருவதை அந்த போதையாளர்கள் உட்பட யாரும் மறுப்பதற்கில்லை. இவற்றை முற்றிலும் தடை செய்யவேண்டும் என்பது கோடிக்கணக்கான தாய்மார்களின் பிரார்த்தனை. இவற்றின் ஆதிக்கத்தில் இருந்து மனித குலத்தைக் காக்கவேண்டும் என்பது சமூகப் பொறுப்புணர்வுள்ள நல்ல மனிதர்களின் ஆவல். ஆனால் இந்தத் தீமையை உண்ணாவிரதப் போராட்டங்கள் மூலமாகவோ சட்டங்கள் மூலமாகவோ காவல்துறை கட்டுப்பாடுகள் மூலமாகவோ தடுக்க முடிவதில்லை என்பதை அனுபவபூர்வமாகவே நாம் அறிகிறோம். என்னதான் கடுமையாக மதுவிலக்கையே அரசு அமுல்படுத்தினாலும் அங்கு கள்ளச்சாராயம் ஊடுருவுவதைக் காண்கிறோம்.

பிறகு என்னதான் வழி?

மேற்படி தீமையில் இருந்து மக்களைக் காப்பாற்ற உரிய தடுப்பு நடவடிக்கைகளை கைகொள்வதோடு மனித இதயங்களை திருத்துவதற்கான வழிகளையும் ஒருசேர செயல்படுத்தினால் இதற்கு ஒரு தீர்வு ஏற்படும். இவ்வுலகைப் படைத்த இறைவன் தன் இறுதித் தூதர் மூலமாக காட்டிய வழி இதுவாகும்.

**தனிமனித நல்லொழுக்கம்**

முதலில் மனிதன் பாவங்களிருந்து தவிர்ந்து வாழ வேண்டுமானால் என்ன தேவை எனபதை ஆராய்வோம். அதற்கு முக்கியமாக மனித மனங்களுக்குள் இரண்டு அடிப்படை விஷயங்கள் விதைக்கப் படவேண்டும். முதலாவதாக என்னைப் படைத்து பரிபாலிக்கக்கூடிய இறைவன் ஒருவன் எனக்கு மேலே இருக்கிறான். அவன் என்னைக் கண்காணித்து வருகிறான் என்ற உணர்வு மிகமிக முக்கியமானது. அடுத்த படியாக அந்த இறைவனுக்கு நான் பதில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன், நான் தவறு செய்தால் அவன் என்னை தண்டிப்பான் என்ற பய உணர்வும் நல்லது செய்தால் பரிசளிப்பான் என்ற எதிர்பார்ப்பும் மிக முக்கியமானது. இதுவே இறையச்சம் எனப்படும்.

இந்த இறையச்சம் இல்லை என்றால் மனிதன் எந்தப் பாவத்தையும் துச்சமாகவே கருதுவான். தன் மனோ இச்சைகளை நிறைவேற்றிக்கொள்ள மது மற்றும் போதைப் பொருட்களை உட்கொள்ளுதல் மற்றும் விபச்சாரம் உட்பட எப்பாவத்தையும் கூச்சமின்றி செய்வான். அவற்றை நிறைவேற்றக் கொள்ள கொள்ளையும் கொலையும் துணிந்து செய்வான்.

**இந்த இறையச்சம் என்பது இன்று இல்லாமல் போனது ஏன்?**
இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன..

- அறவே நிரூபிக்கப்படாத மனித ஊகங்களைக் கோர்வையாக்கி பரிணாமக் கொள்கை என்ற பெயரில் தவறான அறிவியலை மக்களுக்குக் கற்பித்து இறைவனை மறுக்கும் நாத்திகம் போதிக்கப்படுவது.
- இறைவனின் தூதர்கள் போதித்தபடி ‘படைத்த இறைவன்தான் வணங்குவதற்குத் தகுதியானவன்’ என்று மக்களுக்குக் கற்றுக் கொடுப்பதை விட்டுவிட்டு, குழந்தைப் பருவம் முதல் உயிரற்ற உணர்வற்ற பொருட்களையும் உருவங்களையும் சமாதிகளையும் எல்லாம் காட்டி ‘இதுதான் உன் கடவுள்’ என்று போதிக்கப்படுவது.

அதனால் சிறுவயதிலேயே கடவுளைப் பற்றிய உணர்வு மழுங்கடிக்கப்பட்டு சிறிதளவும் பயம் என்பதே இல்லாமல் தலைமுறைகள் வளர்கின்றன. அவர்கள் பாவங்களில் துணிந்து ஈடுபடுகிறார்கள்.

இதை முதலில் திருத்தினால்தான் தனி மனித நல்லொழுக்கம் உருவாகும். அதற்கு இறைவனைப் பற்றிய இலக்கணங்களையும் அவனது தன்மைகளையும் கலப்படமற்ற முறையில் மக்களுக்கு போதிக்கவேண்டும்.

அடுத்ததாக இவ்வுலக வாழ்க்கையில் மனிதனால் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் இறைவனால் பதிவு செய்யப்பட்டு அதுபற்றி மறுமையில் விசாரிக்கப்பட்டு அந்த அடிப்படையில் சொர்க்கமோ அல்லது நரகமோ அவனுக்கு வாய்க்க இருக்கிறது என்பதை கலப்படம் இல்லாமல் கருத்து சிதைவு இல்லாமல் போதிக்கவேண்டும்.

**சரி எது தவறு எது என்பதற்கான அளவுகோல்**

மனிதர்கள் மனோஇச்சைக்கு ஏற்ப பாவ புண்ணியங்களைத் தீர்மானிப்பது பாவங்கள் பெருகுவதற்கு மற்றொரு காரணம் ஆகும். உண்மையில் இவ்வுலகின் சொந்தக்காரன் எவனோ அவனுக்குதான் பாவம் எது புண்ணியம் எது என்பதை தீர்மானிக்கும் அதிகாரம் உள்ளது. அவன்தான் மறுமையில் இறுதித்தீர்ப்பு நாளின்போது நம் செயல்களை விசாரிக்க இருப்பவன். மேலும் அவன்தான் தன் படைப்பினங்களுக்கு எது நல்லது எது தீயது என்பவற்றை நுணுக்கமாக அறிந்தவனும் அவைகளின் உரிமைகளை பக்குவமாக பங்கிட்டு அளிக்கக்கூடியவனும் ஆவான்.

அவன்தரும் அளவுகோலின்படி மது என்பது முழுக்க தடை செய்யப்பட்டதாகும். இறைவன் தன் திருமறையில் கூறுகிறான்:

- “(நபியே!) மதுபானத்தையும், சூதாட்டத்தையும் பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர் நீர் கூறும் “அவ்விரண்டிலும் பெரும் பாவம் இருக்கிறது்மனிதர்களுக்கு (அவற்றில் சில) பலன்களுமுண்டு ஆனால் அவ்விரண்டிலும் உள்ள பாவம் அவ்விரண்டிலும் உள்ள பலனைவிடப் பெரிது.” (அல்குர்ஆன் 2:219)
- இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: மது பானத்தையும், அதைப் பருகுபவரையும், பிறருக்கு பருகக் கொடுப்பவரையும், அதை விற்பவரையும்,

அதை வாங்குபவரையும், அதை (பிறருக்கு) தயார் செய்து கொடுப்பவரையும், (தானே) தயார் செய்து கொள்பவரையும், அதைச் சுமந்து செல்பவரையும், யாருக்காக அது சுமந்து செல்லப்படுகிறதோ அவரையும் இறைவன் சபிக்கிறான் என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்: இப்னு உமர் (ரலி) நூல்: இப்னு மாஜா 3371

- போதைப் பொருளை அருந்துபவர்களுக்கு மறுமையில் நரகவாசிகளின் வேர்வை அல்லது நரகவாதிகளிடம் பிழிந்தெடுக்கப்பட்ட பானம் புகட்டப்படும் என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்

.(அறிவிப்பவர்: ஜாபிர்(ரலி) - நூல்: முஸ்லிம்)

**மது அருந்துவோருக்கு தண்டனை**

மதுவை தீமைகளின் தாய் என்று கண்டித்து தடை செய்ததோடு மட்டுமல்லாமல் அதன் தீமைகளில் இருந்து பொதுமக்களைப் பாதுகாக்க ஒரு நடைமுறை சாத்தியமான தீர்வையும் நபிகள் நாயகம் கூறிச் சென்றார்கள். அதை மதீனாவில் அரசாட்சி கைவந்தபோது நடைமுறைப்படுத்தவும் செய்தார்கள். அது என்ன? இதோ நபிகளாரின் ஆட்சியின்போது நடந்த சம்பவங்களில் ஒன்று இது:

நுஐமான் என்பவர் மது குடித்த நிலையில் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் கொண்டு வரப்பட்டார். அப்போது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் வீடுகளில் இருந்தவர்களுக்கு (அவரைஅடிக்குமாறு) கட்டளையிட்டார்கள். மக்கள் அவரைக் கைகளாலும் பேரித்த மர மட்டையாலும், செருப்புகளாலும் அடித்தார்கள். அவரை அடித்தவர்களில் நானும் ஒருவன். அறிவிப்பவர்: உக்பது பின் அல்ஹாரிஸ் (ரலி) (ஆதார நூல்: அஹ்மத் 18610)

மதுவிலக்கை அமுல்ப்படுத்துவதோடு பொதுமக்களுக்கு முன் குடித்த நிலையில் வருபவர்களுக்கு உடனடி தண்டனை வழங்க ஏற்பாடு செய்தால் யாராவது அதற்குத் துணிவார்களா? பாதிக்கப்படும் மக்களுக்கு “குடிமகன்களை” தண்டிக்கும் அதிகாரத்தைக் கொடுத்து அதை சட்டபூர்வமாக்கலாம். இதை தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பினால் நாடே இதுகுறித்து விழிப்புணர்வு பெறும் என்பதில் ஐயம் இல்லை.

ஆக, நல்லொழுக்கம் மிக்க குடிமக்களை உருவாக்குவதற்கு அவர்கள் மனங்களில் முறையான இறையச்சம் விதைக்கவேண்டும். அதில் நிலைத்திருக்க படைத்த இறைவனுக்கு அனுதினமும் நன்றிகூறும் வழிபாட்டை கற்பிக்கவேண்டும். அவர்கள் தங்கள் அன்றாடப் பொறுப்புகளை நிறைவேற்ற தடையாக நிற்கும் மதுவை அருந்தினால் இம்மையிலும் மறுமையிலும் உண்டாகும் தீமைகள் குறித்து எச்சரிக்கவேண்டும். அவற்றை மீறுவோரின் தீமைகளில் இருந்து பொதுமக்களைக் காக்க அக்குற்றவாளிகளை உடனடியாக தண்டிக்கும் பொறுப்பை பொதுமக்களிடமே ஒப்படைத்து அதை சட்டபூர்வமாக்க வேண்டும். இதுவே இஸ்லாம் இத்தீமையை ஒழிக்கக் கூறும் வழி.



# மாமனிதர் மது ஒழித்த வரலாறு

மது தீமைகளின் தாயாகத் திகழ்கிறது. மதுவற்ற தேசத்தை நினைத்துக் கூட பார்க்க முடியாதவாறு இன்று எங்கும் அது பரந்து விரிந்து வியாபித்துள்ளது

தனது சிந்தையை மதுவிடத்தில் ஒப்படைத்தவர்கள் அதனை விட்டு மீளவே முடியாதவாறு அது குடிப்பவர்களை ஆளுமை செய்து விடுகிறது. மதுவைத் தடுக்க வேண்டிய அரசாங்கமோ குடி கொடுக்கும் குடியரசாகத் திகழ்கிறது. உயிர்கள் பலவற்றைக் குடித்தாலும் உறவுகள் பலவற்றை அது முறித்தாலும் குடிகள் பலவற்றை அது கெடுத்தாலும் அந்த கொடிய தீமையை அறவே நிறுத்தமுடியாது எனப் பலர் கூக்குரலிடும் இந்த நேரத்தில் நம்மைப் படைத்த இறைவனால் அனுப்பப்பட்ட அவனது தூதர் தனது பிரச்சாரத்தின் மூலமும் செயல்பாட்டின் மூலமும் மதுவை தனது நாட்டில் அழித்த வரலாற்றை நாம் தெரிந்து கொள்வோம்.

மது மட்டுமல்ல, சமூகத்தில் ஏற்றத்தாழ்வு கற்பித்தல், தீண்டாமை, வரதட்சணை, பெண்ணடிமைத்தனம், மனித உரிமை மீறல்கள் என அனைத்து சமூகத் தீமைகளுக்கும் எதிராக குரல் கொடுப்பது மட்டுமல்ல மாறாக நடைமுறைக்கு சாத்தியமான தீர்வுகளையும் வழங்குவது இஸ்லாமிய மார்க்கம். மதுவின்றி வாழ்கையில் எதுவுமே இல்லை என வாழ்ந்து கொண்டிருந்த அரேபிய மக்கள் மது அருந்துதல் என்பது ஒரு தீய பழக்கம் என்ற சிந்தனையே இல்லாது தண்ணீர் குடிப்பது போல் மது அருந்தும் குடிகார மக்களாக வாழ்ந்து வந்தனர்.

திசையற்று பயணித்துக்கொண்டிருந்த அந்த மக்களிடையே நபிகள் நாயகம் (ஸல்) இஸ்லாம் மார்க்கம் கூறும் மூன்று முக்கிய அடிப்படைகளை நினைவூட்டி மக்களை நல்லொழுக்க சீலர்களாக மாற்றினார்கள். ஒன்றே மனிதகுலம் ஒருவன் மட்டுமே இறைவன், அவனிடமே நமது மீளுதலும் என்பவையே அந்த அடிப்படைகள். இவைகளை மனித மனங்களில் விதைக்க விதைக்க மனித சமத்துவத்தையும் சக மனிதனின் உரிமைகளைப் பேணவேண்டியது கடமை என்பதையும் உணர்ந்தார்கள். நல்லொழுக்கத்தைப் பேணுவோருக்கு இறைவனிடம் வெகுமதிகளும் பேணாதவர்களுக்கு தண்டனைகளும் காத்திருக்கின்றன என்பதை உணர்ந்த மாத்திரத்திலேயே அவர்கள் சமூகப் பொறுப்புணர்வு மிக்க ஒழுக்க சீலர்களாய் மாறினார்கள்.

ஆரம்பத்தில் மக்களிடையே இஸ்லாம் தெளிவு படுத்தப்பட்ட பின்னரும் இந்த போதையளிக்கும் மது எதற்கு என்ற ரீதியில் நபியவர்களிடத்தில் மதுவைப் பற்றி பேசினார்கள். ஆனாலும் இறைவனோ நபியவர்களோ உடனடியாக மது தடுக்கப்பட்டு விட்டது அது உங்களுக்கு ஆகுமானதல்ல என்று உத்தரவு விதிக்கவில்லை. அவர்கள் விரும்பி அருந்திக்கொண்டிருந்த மதுவை உடனடியாக நிறுத்துவது இறைவனின் நாட்டமாக இருக்கவில்லை.

● இறைவன் நபி(ஸல்) அவர்களுக்கு முதல் கட்டமாக திருக்குர்ஆனின் பின்வரும் வசனத்தை இறக்கினான்....

“(நபியே!) மதுபானத்தையும், சூதாட்டத்தையும் பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர் நீர் கூறும்: “அவ்விரண்டிலும் பெரும் பாவம் இருக்கிறது் மனிதர்களுக்கு (அவற்றில் சில) பலன்களுமுண்டு் ஆனால் அவ்விரண்டிலும் உள்ள பாவம் அவ்விரண்டிலும் உள்ள பலனைவிடப் பெரிது” (திருக்குர்ஆன் 2:219)

மதுவில் நன்மையை விட தீமை அதிகமுள்ளது தவிர்ந்திருத்தல் நல்லது என்ற இந்த அறிவுரை வந்தபோது சிலர் தவிர்ந்திருநதனர. சிலர் மது அருந்தினார்கள்.

● சிறிது காலம் சென்றது மக்கள் மது குடித்தவாறே தொழுகையில் ஈடுபட்டார்கள். தொழுகையின்போது குர்ஆனின் வசனங்களை ஓத வேண்டும். தொழுகையில் போதை காரணமாகச் சிலர் தவறாக ஓதினார்கள். இப்போது இறைவன் சற்று கட்டுபடுத்தும் விதமாக “நீங்கள் மது அருந்திய நிலையில் இருக்கும்போது தொழுகைக்கு நெருங்காதீர்கள் ” (திருக்குர்ஆன் 4:43) என்ற வசனத்தை இறக்கினான்.

● இவ்வாறு சிறிது காலம் சென்றது. இப்போது மக்கள் தொழுகையின் போது மட்டும் மது அருந்தாமல் இருந்தனர். இருந்தாலும் நேர்வழி பெற்ற நபித் தோழர்கள் மதுவைத் தடை செய்வது பற்றித் தெளிவான வசனம் இறைவனிடமிருந்து வர வேண்டும் எனப் பிரார்த்தித்தார்கள். சிறிது காலத்திற்குப் பின்னர் மதுவிலக்கு குறித்து முழுமையான வசனம் இறக்கியது.

.”நம்பிக்கை கொண்டோரே! மதுபானமும், சூதாட்டமும், கற்சிலைகளை வழிபடுதலும், அம்புகள் எறிந்து குறி கேட்பதும், ஷைத்தானின்அருவருக்கத்தக்கச் செயல்களிலுள்ளவையாகும்ஹ ஆகவே இவற்றை நீங்கள் தவிர்த்துக் கொள்ளுங்கள். அதனால் நீங்கள் வெற்றியடைவீர்கள்.” (திருக்குர்ஆன் 5:90)

இவ்வசனம் இறக்கப்பட்டதும் நபித்தோழர்கள் மகிழ்ந்தார்கள். எங்கள் விஷயத்தில் எங்கள் இறைவன் தெளிவான தீர்ப்பளித்து விட்டான் என இறைவனைப் புகழ்ந்தார்கள். இந்த வசனம் இறங்கியதுபோது வினாடிகூட தாமதிக்கவில்லை. அருந்திக் கொண்டிருந்தவர்கள் மதுவைத் துப்பினார்கள். குடித்தவர்கள் வாந்தி எடுத்தார்கள். மதீனா வீதிகளிலே அவர்கள் வீடுகளில் வைத்திருந்த மது பீப்பாய்களைக் கொட்டினார்கள்.

மதுவிலக்கு அங்கு பூரணமாக அமல்படுத்தப்பட்ட போதும் அவர்களுக்கு அது ஒரு பாரமாகவோ, சுமையாகவோ, பின்பற்ற முடியாததாகவோ இருக்கவில்லை.

அவர்கள் இறைத்தீர்ப்பை பொருந்திக் கொண்டார்கள். மதுவை முழுவதும் விட்டொழித்த சான்றோர்களாய்த் திகழ்ந்தார்கள். எப்படி இது சாத்தியமாயிற்று..? இறைவனைக் குறித்த அச்சத்தை முதலில் விதைத்தார்கள். பின்னர் படிப்படியாக மது தடை செய்யப்பட்டது. முதலில் மதுவின் தீங்கைப் பற்றி எடுத்துரைத்து, பின்னர் இறைவனை ஐவேளைத் தொழும் போது தடைவிதித்து, பின்னர் மதுவை முற்றிலுமாக தடை செய்த போது அவர்களுக்கு அது ஒன்றும் பெரிய பாதிப்பை ஏற்படுத்தவில்லை.

இங்கு நாம் கவனிக்கவேண்டிய ஒரு விடயம் என்ன என்பதைப் பாருங்கள்.... மக்கள் தாங்களாகவே ஒழுக்க வாழ்வு வாழ்வதற்கு மது தடையாக இருப்பதை உணர்ந்து அவர்களாகவே இது இறைவனால் தடைசெய்யப்பட வேண்டி பிரார்த்திக்கிறார்கள். இறைவனும் அதை நிறைவேற்றுகிறான்! தலைமுறை தலைமுறையாக உலகெங்கும் இஸ்லாம் பரவப் பரவ இதன் கட்டமைப்புக்கும் வருவோர் எல்லாம் மதுவின் தீங்குகளில் இருந்து காப்பாற்றப் படுகிறார்கள்!

# மது அருந்துவோருக்கு எச்சரிக்கை

- மனிதனின் அறிவை மாற்றி மிருகத்திற்கு ஒப்பாக்கி வைக்கும் மதுவை அருந்துதல் கொடிய குற்றமாகும். மதுவை தவிர்த்துக்கொள்ளுங்கள். ஏனெனில் அது கெடுதிகள் அனைத்திற்கும் தாயாகும். இறைவன் மீது பிரமாணமாக உண்மை விசுவாசமும் கள் குடித்தலும் ஒன்று சேராது. இரண்டில் ஒன்று மற்றொன்றை அப்புறப்படுத்திவிடும் என்று நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். அறிவிப்பவர் : உதுமான் ( ரலி ) அவ்ர்கள். நூல்: நஸாஈ
- மது அருந்துவோர் குற்றவாளியாக இருப்பது போல அவர்களுக்கு உதவியாக இருப்போரும் குற்ரவாளிகளே. நாயகம் (ஸல்) அவர்கள் மது சம்பந்தமாக 10 பேர்களை சபித்துள்ளார்கள். 1) மதுவை காய்ச்சுபவர், 2) அதனை காய்ச்சுவதற்கு உதவுபவர், 3)அதை குடிப்பவர் , 4) அதனை புகட்டுபவர், 5) அதனை சுமந்து செல்பவர், 6) அதனை சுமந்து செல்ல ஏற்பாடு செய்பவர், 7) அதனை விற்பனை செய்பவர், 8) அதை வாங்குபவர், 9) அதனை வெகுமதியாக கொடுப்பவர், 10. அதனை விற்று புசிப்பவர் ஆகியோர்.
அறிவிப்பவர் : ஹஜ்ரத் அனஸ் (ரலி) நூல்: திர்மிதி
- “போதைப் பொருளை அருந்துபவர்களுக்கு ”தீனத்துல் கப்பால்” எனும் பானத்தை புகட்டுவதாக இறைவன் முடிவு செய்துள்ளான்“ என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அப்போது நபித்தோழர்கள், “தீனத்துல் கப்பால் என்றால் என்ன?“ என்று கேட்டனர். “அது நரகவாசிகளின் வேர்வை அல்லது நரகவாதிகளிடம் பிழிந்தெடுக்கப்பட்ட பானம்“ என பதிலளித்தார்கள்.(அறிவிப்பவர்: ஜாபிர்(ரலி) - நூல்: முஸ்லிம்)
- “மதுபோதையில் மூழ்கியவன் இறந்துவிட்டால் சிலைவணங்கியைப் போன்று -மறுமையில்- இறைவனை சந்திப்பான்.“ என்றும் நபி (ஸல்) அவர்கள் அறிவித்தார்கள் (நூல்: அஹமத்)

# இறைவன் மதுவிலக்கை ஏன் அமுல்படுத்தவில்லை?

மதுவை தீமை என்றும் மதுவோடு தொடர்பு கொள்ளும் அனைவரையும் சபிக்கும் இறைவன் அந்த மதுவை அவனே தடை செய்திருக்கலாமே?

இறைவனிடம் இந்தக் கேள்வியைக் கேட்பதற்கு முன்னால் நாம் நமது நிலையைப் பற்றி சற்று தெரிந்துகொள்வோம்....

- இம்மாபெரும் பிரபஞ்சத்தில் பரவிக்கிடக்கும் கோடானுகோடி பந்துகளில் ஒரு பந்தான பூமிப் பந்தின்மீது ஒட்டிக்கொண்டு இருக்கும் ஒரு துகள் போன்றவர்கள் நாம்.
- இவற்றின் படைப்பிலோ இயக்கத்திலோ கட்டுப்பாட்டிலோ ஒரு துளியளவு கூட நம் பங்களிப்பு இல்லை.
- மட்டுமல்ல நாம் நமது என்று சொல்லிக்கொள்ளும் நம் உடல் பொருள் ஆவி என இதில் எதுவுமே நமது அல்ல, இவற்றின் கட்டுப்பாடும் முழுமையாக நம் கைவசம் இல்லை.
- நாம் இங்கு வருவதும் போவதும் - அதாவது நம் பிறப்பும் இறப்பும் – நம் விருப்பப்படி நடப்பது அல்ல.

நம்மை மீறிய நம் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட ஒரு சக்திதான் இவற்றையெல்லாம் படைத்து பரிபாலித்து தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டு வருகிறது. அந்த சக்தியையே இறைவன் அல்லது கடவுள் என்று அழைக்கிறோம்.

● எனவே முதலாவதாக அவனே எஜமானன் நாமோ அடிமைகள் என்பதால் அவனை கேள்விகள் கேட்கவோ அவனது திட்டங்களுக்கு மாற்றாக வேறு ஒன்றைப் பரிந்துரைக்கவோ நமக்கு துளியும் அதிகாரமும் இல்லை அதற்கேற்ற அறிவும் ஆற்றலும் நம்வசம் இல்லை என்பதை நாம் உணரவேண்டும்.

● அடுத்ததாக நமக்கு வழங்கப்பட்டுள்ள அற்பமான பகுத்தறிவு கொண்டு சிந்திக்கும்போது இப்பிரபஞ்சத்தின் விசாலமும் நுட்பமும் குறையில்லா இயக்கமும் அதற்குப் பின் உள்ள பலவும் இறைவனின் வல்லமையையும் நுண்ணறிவையும் அதிபக்குவமான திட்டமிடுதலையும் பறைசாற்றி நிற்பதை நாம் உணரலாம். திருமறை குர்ஆனில் இறைவன் கூறுகிறான்:

2:164 .நிச்சயமாக வானங்களையும், பூமியையும் படைத்திருப்பதிலும் இரவும்,பகலும் மாறி, மாறி வந்து கொண்டிருப்பதிலும், மனிதர்களுக்குப் பயன் தருவதைக் கொண்டு கடலில் செல்லும் கப்பல்களிலும் வானத்திலிருந்து அல்லாஹ் தண்ணீரை இறக்கி அதன் மூலமாக பூமி இறந்த பின் அதை உயிர்ப்பிப்பதிலும் அதன் மூலம் எல்லா விதமான பிராணிகளையும் பரவ விட்டிருப்பதிலும், காற்றுகளை மாறி, மாறி வீசச் செய்வதிலும் வானத்திற்கும், பூமிக்குமிடையே கட்டுப்பட்டிருக்கும் மேகங்களிலும் – சிந்தித்துணரும் மக்களுக்கு சான்றுகள் உள்ளன.

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்று பொருள்)

இவ்வாறு இப்பிரபஞ்சம் முழுவதுமே நமக்காக இயங்கிக்கொண்டிருக்கும் போது நாம் வீணுக்காகப் படைக்கப் பட்டிருப்போமா? இதையே இறைவன் கேட்கிறான்:

23:115. நாம் உங்களைப் படைத்ததெல்லாம் வீணுக்காக என்றும், நீங்கள் நம்மிடத்தில் நிச்சயமாக மீட்டப்பட மாட்டீர்கள் என்றும் எண்ணிக் கொண்டீர்களா?

அவ்வாறு சிந்திக்கும்போது இவை எதுவும் வீணுக்காக அல்ல. ஒரு மகத்தான உறுதியான திட்டத்தின் கீழ்தான் நாம் படைக்கப் பட்டிருக்கிறோம் என்பது புலனாகும். இறைத்தூதர்களும் இறைவேதங்களும் நமக்கு எடுத்துச் சொல்வது உண்மை என்று புலப்படும். அந்த உண்மை என்னவெனில் இவ்வுலகை இறைவன் ஒரு பரீட்சைக்கூடமாகப் படைத்துள்ளான் என்பது. இதில் நமது செயல்கள் அனைத்தும் பதிவு செய்யப்படுகின்றன. யார் இறைவனுடைய கட்டளைகளுக்கு கட்டுப்பட்டு வாழ்கிறார்களோ அவர்கள் இப்பரீட்சையில் வெற்றி பெறுகிறார்கள். அவர்களுக்கு சொர்க்கம் என்ற நிரந்தர வசிப்பிடம் உண்டு. யார் கட்டுப் படாமல் தான்தோன்றித்தனமாக வாழ்கிறார்களோ அவர்கள் இப்பரீட்சையில் தோல்வி அடைகிறார்கள். அவர்களுக்கு நரகம் என்ற நிரந்தர வேதனைகள் கொண்ட வசிப்பிடம்தான் கிடைக்கும்.

இந்தப் பரீட்சைக் கூடத்திற்குள் நாம் அனைவரும் அவரவருக்கு விதிக்கப்பட்ட தவணையில் வந்து போகிறோம். இங்கு இறைவனின் கட்டளைகளுக்குக் கீழ்படிந்து செய்யப் படும் செயல்கள் நன்மைகளாகவும் கீழ்படியாமல் மாறாகச் செய்யப்படும் செயல்கள் தீமைகளாகவும் பதிவாகின்றன. இவ்வாறு ஒவ்வொருவருக்கும் நன்மைகள் அல்லது தீமைகள் செய்வதற்கு சுதந்திரமும் வாய்ப்பும் அளிக்கப்படும் இடமே இந்த தற்காலிகப் பரீட்சைக் கூடம்!

67:2 .உங்களில் எவர் செயல்களால் மிகவும் அழகானவர் என்பதைச் சோதிப்பதற்காக அவன், மரணத்தையும் வாழ்வையும் படைத்தான் மேலும், அவன் (யாவரையும்) மிகைத்தவன் மிக மன்னிப்பவன்.

21:35 .ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுவைப்பதாகவே இருக்கிறது் பரீட்சைக்காக கெடுதியையும், நன்மையையும் கொண்டு நாம் உங்களைச் சோதிக்கிறோம். பின்னர், நம்மிடமே நீங்கள் மீட்கப்படுவீர்கள்.

கீழ்கண்டவை இந்த பரீட்சைக் கூடத்தின் இயல்புகள் என்று நாம் புரிந்துகொள்ள வேண்டும்:

- இங்கு நேரான பாதையை மக்களுக்குக் காட்டித்தர இறைவன் தனது தூதர்களையும் தன் வேதங்களையும் அனுப்புகிறான். அதே நேரத்தில் இது ஒரு பரீட்சை என்ற காரணத்தால் இதில் ஷைத்தான் என்ற ஒரு கெட்ட சக்திக்கும் நம்மோடு வாழ அனுமதி வழங்கியுள்ளான்.
- இங்கு இறைவன் எதை செய் என்று சொல்கிறானோ அதுவே நன்மை அல்லது புண்ணியம் ஆகும். எதை செய்யாதே என்று தடுக்கிறானோ அதுவே தீமை அல்லது பாவம் ஆகும். அவற்றை இறைவனின் வேதம் மூலமாகவும் தூதர் மூலமாகவும் அறிகிறோம்.

● இங்கு நல்லவையும் தீயவையும் நியாயமும் அநியாயமும் செல்வமும் வறுமையும் நம் முன் மாறிமாறி வரும். நல்லோர்களுக்குத் துன்பமும் கஷ்டமும் தீயோர்களுக்கு இன்பமும் மகிழ்ச்சியும் கிடைப்பதெல்லாம் இங்கு சகஜம். நன்மை செய்வதற்கும் தீமை செய்வதற்கும் அனைவருக்கும் வாய்ப்பளிக்கப்படும் இடமே இவ்வுலகம்.

● யார் எவ்வாறு வேண்டுமானாலும் எதைக்கொண்டு வேண்டுமானாலும் பரீட்சிக்கப்படலாம். அவற்றின் நியாயம் அநியாயம் என்பது நமது சிற்றறிவுக்கு எட்ட வேண்டும் என்பது இல்லை. நீர்க்குமிழிகள் போல் வாழ்ந்து மறையும் மனிதர்களின் தீர்ப்புக்காக இறைவன் காத்திருக்க வேண்டிய அவசியமும் அவனுக்கு இல்லை.

● இந்த பரீட்சையை எவ்வளவு பக்குவமாக நடத்துவது என்பதை மிக நுணுக்கமாக அறிந்தவன் இறைவன். அவனது அறிவுநுணுக்கமும் அளவிலா ஆற்றலும் நம்மைச்சுற்றி உள்ள படைப்பினங்களின் பக்குவமான அமைப்பிலும் அவற்றின் குறையற்ற இயக்கத்திலும் அது பிரதிபலிப்பதைக் காண்கிறோம். அற்பஜீவிகளான நம்முடைய சிற்றறிவுக்கு அறவே புலப்பட வாய்ப்பில்லை.

● அவன் எதுவரை அனுமதிக்கிறானோ மற்றும் எவற்றை நமக்கு அறிவித்துத் தருகிறானோ அவை மட்டுமே நமது அற்ப அறிவு என்பது. அதை வைத்துக்கொண்டு அந்த இறைவனின் அறிவையும் ஆற்றலையும் எடைபோடுவதும் அவனது திட்டத்தில் குறைகாண்பதும் மனிதனின் அறியாமையின் வெளிப்பாடே! மட்டுமல்ல, ஒரு குறிப்பிட்ட அற்பமான தவணையில் தோன்றி மறையும் அற்பத்திலும் அற்பமான மனிதன் ஆதியும் அந்தமும் இல்லாதவனும் அளவிலா அறிவும் ஆற்றலும் கொண்டவனும் ஆன இறைவனுக்கு அவன் ஏற்பாட்டுக்கு மாற்று ஒன்றைப் பரிந்துரைப்பது அகங்காரத்தின் உச்சகட்டம் என்பதை நாம் உணரக் கடமைப்பட்டுள்ளோம்.

ஆக இந்த பரீட்சைக் கூடத்தில் ஒரு பரீட்சைப் பொருளாக மதுவைப் படைத்து அதை உட்கொள்வதை பாவம் என்றும் அதை தவிர்ப்பதைப் புண்ணியம் என்றும் தன் வேதம் மூலமாகவும் தூதர் மூலமாகவும் அறிவித்து உள்ளான். புண்ணியவான்களுக்கு சொர்க்கமும் பாவிகளுக்கு நரகமும் மறுமையில் காத்திருக்கிறது என்பதையும் தெளிவு படுத்தியுள்ளான்.

# நபிகளாரின் பிரார்த்தனை

நபி(ஸல்) அவர்கள் படுக்கைக்குச் செல்லும்போது, ‘‘பிஸ்மிக்க அமூத்து வ அஹ்யா‘‘ ( (இறைவா!) உன் பெயர் கூறியே இறக்கிறேன். உயிர் வாழவும் செய்கிறேன்) என்று கூறுவார்கள். (உறக்கத்திலிருந்து) எழும்போது ‘‘அல்ஹம்து லில்லாஹில்தீ அஹ்யானா பஅத மா அமாத்தனா வ இலைஹிந் நுஷூர்‘‘ (எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. அவன் எங்களை இறக்கச் செய்த பின்னர் எங்களுக்கு உயிரூட்டினான். மேலும், அவனிடமே செல்லவேண்டியுள்ளது )என்று கூறுவார்கள். (நூல்: புகாரி)

# போதைபொருள் பயன்பாடு பெரும்பாவம்!

இஸ்லாம் மதுபானத்தை தடுத்தமைக்கான காரணம் அது போதையை ஏற்படுத்துகின்றது என்பதாகும். எனவே, ஒரு பானம் எந்தப் பொருளில் தயாரிக்கப்பட்டிருந்தாலும் சேர்மானங்கள் எதுவாக இருந்தாலும் அது போதையை ஏற்படுத்தும் என்றிருந்தால் அது தடுக்கப்பட்டதாக கொள்ளப்படும்.

● ஒரு முறை நபியவர்களிடம் தேன், அல்லது பார்லி அல்லது கோதுமை முதலானவற்றில் தயாரிக்கப்படும் ஒருவகை மதுபானம் பற்றி வினவப்பட்டது. அதற்கு நபியவர்கள், சொற்சுருக்கத்துடனும் பொருட் செறிவுடனும் பின்வருமாறு கூறினார்கள்:
''போதையை ஏற்படுத்தும் அனைத்தும் ''கம்ர்'' எனும் மதுபானமாகும். அனைத்து ''கம்ரும்'' தடுக்கப்பட்டதாகும்.'' (முஸ்லிம்)

● மேலும் அதிக போதை ஏற்படுத்தக்கூடிய மதுபானங்கள் மட்டுமன்றி குறைவாகப் போதையைக் கொடுப்பவையும் தடுக்கப்பட்டவையாகும். இது பற்றி நபி மொழி ஒன்று பின்வருமாறு கூறுகின்றது.
''அதிக போதை ஏற்படுத்தக் கூடியதை குறைவாக உட்கொள்வதும் தடுக்கப்பட்டதாகும்'' (அஹ்மத், அபூதாவுத், திர்மிதி). இந்த வகையில் மதுபானம் போன்றவற்றில் ஓரிரு மிடறுகள் அருந்துவதும் தடுக்கப்பட்டதாகவே கொள்ளப்படும்.

● மதுபானம் அருந்துவது மட்டுமன்றி அதை விற்பனை செய்வதும் தடுக்கப்பட்டதாகும். ஒரு முஸ்லிம் மதுபானம் வடிக்கவோ, விற்கவோ, விற்கும் இடத்தில் வேலை செய்யவோ முடியாது. மதுபானம் தொடர்பாக நபி (ஸல்) அவர்கள், அதனை வடிப்பவர், விற்பவர், வாங்குபவர், குடிப்பவர், சுமப்பவர் உட்பட மதுபானம் பரிமாறப்படுவதற்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ பங்களிப்புச் செய்யும் பத்துப் பேரை சபித்தார்கள். இது தொடர்பான ஹதீஸ், ஸுனன் திர்மிதி, ஸுனன் இப்னுமாஜா ஆகிய கிரந்தங்களில் பதிவாகியுள்ளது.

● இது மட்டுமன்றி ''தீமைக்கு வழி சமைக்கும் வழிகளை அடைத்தல்'' என்ற இஸ்லாத்தின் சட்ட விதியின் அடிப்படையில் திராட்சைப் பழம் விற்பனை செய்வது கூடுமாயினும் அதனை மதுபானம் தயாரிப்பதற்காக வாங்குபவருக்கு விற்பனை செய்வது தடுக்கப்பட்டதாகும்.

# இறைவன் ஏன் பரீட்சிக்க வேண்டும்?

"இறைவன் இவ்வுலக வாழ்வை ஒரு பரீட்சைக்களமாக அமைத்திருக்கிறான். இந்தப் பரீட்சையில் யார் அவனுக்குக் கீழ்படிந்து தங்கள் ஆசாபாசங்களைக் கட்டுப்படுத்தி வாழ்கின்றார்களோ அவர்களுக்குப் பரிசாக சொர்க்கத்தை அவன் வழங்க உள்ளான். யார் கீழ்ப்படியாமல் தான்தோன்றித்தனமாக வாழ்கின்றார்களோ அவர்களுக்கு நரகத்தை தண்டனையாக வழங்கவுள்ளான்." என்றெல்லாம் இறைத்தூதர்கள் போதிக்கும் போது கீழ்கண்ட சந்தேகங்கள் மனிதர்களிடம் எழுவது இயல்பு:

நாமே சற்று சிந்தித்தால் இக்கேள்விகளுக்கான விடைகள் நாமே பெறலாம்.
**கேள்வி**: இறைவன் ஏன் பரீட்சிக்க வேண்டும்? அவன்தான் அனைத்தையும் அறிபவனாயிற்றே... - குறிப்பாக முக்காலத்தையும் - அறியக்கூடிய அவன் நேரடியாகவே இன்ன மனிதன் பரீட்சையில் ஜெயிப்பானா அல்லது தோற்பானா என்பதை முன்கூட்டியே அறிய முடியுமே.... அந்த அடிப்படையில் அந்த மனிதனை சொர்கத்திலோ அல்லது நரகத்திலோ போடலாமே?
**பதில்:** அதற்கு இறைவனுக்கு எந்த அடிப்படையும் தேவை இல்லை. அவன் விரும்பியதை செய்துகொள்ள யார் தயவும் தேவைப்படாதவன். அவன் அப்படி உங்களை சொர்க்கத்திலோ நரகத்திலோ போட்டாலும் நீங்கள் திருப்பிக் கேட்கவும் முடியாது என்பதே உண்மை. உதாரணமாக உங்களை அப்படி நரகத்தில் நேரடியாகப் போட்டால் என்ன செய்வீர்கள்? எதற்காக என்னை தண்டிக்கிறாய்? நான் என்ன செய்தேன் என்று கேட்பீர்களா இல்லையா?

**கேள்வி:** சரி, எதற்கு நரகம்? நாம் கஷ்டப்படுவதைப் பார்த்து ரசிப்பது அவன் விருப்பமா?
**பதில்**: அப்படிப்பட்டவனாக இருந்தால் அவன் அனைவரையும் நேரடியாக நரகத்துக்கு அனுப்பி இருப்பானே? அப்போதும் அவனை யாரும் எந்தக் கேள்வியும் கேட்க முடியாது.

**கேள்வி:** சரி, நேரடியாக சொர்க்கத்தில் போட்டால் இறைவனுக்கு என்ன நஷ்டம்?
**பதில்**: அவன் நம்மை நரகத்தில் போட்டாலும் சொர்க்கத்தில் போட்டாலும் அவனைத் திருப்பிக் கேட்க முடியாது. நமக்கு விளக்கம் சொல்லிகொண்டிருக்க வேண்டிய அவசியமும் அவனுக்குக் கிடையாது.

ஆனால் இறைவன் மிகக் கருணையாளன். நம்மை- அதாவது முதல் மனிதரையும் அவரது மனைவியையும் - படைத்ததன் பின்னர் அவர்களை சொர்க்கத்தில்தான் குடியமர்த்தினான் என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். பைபிளும் குர்ஆனும் அவ்வாறுதான் சொல்கின்றன. ஆனால் சொர்க்கத்தின் அருமையை அதன் விலைமதிப்பை உணராத அவர்கள் சில தவறுகளை செய்தார்கள். அதன் காரணமாக இறைவன் அவர்களை அங்கிருந்து வெளியேற்றினான்.

இங்கு முக்கியமாக கவனிக்கவேண்டிய விடயம் இதுதான்... பசித்தவனுக்குத்தான் உணவின் அருமையும் தாகம் உள்ளவனுக்குத்தான் நீரின் அருமையும் தெரியும். வெயிலில் சென்று வந்தவனுக்குத் தான் நிழலின் அருமை தெரியும். எனவே சொர்க்கத்தை இலவசமாகக் கொடுக்காமல் அதை சிறிது கஷ்டப்பட்டு உழைத்து சம்பாதிக்கும் பொருளாக அவன் ஆக்கிவிட்டான்.

சொர்க்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நமது ஆதி தந்தையும் தாயும் நாம் இன்று வாழும் பூமிக்கு அனுப்பப் பட்டார்கள். இந்த நிகழ்வு பற்றி திருக்குர்ஆனில் இறைவன் கூறுவதை சுருக்கமாகக் காண்போம்:

சொர்க்கத்தில் இறைவன் புசிக்க வேண்டாம் என்று தடுத்த கனியை ஷைத்தானின் தூண்டுதலால் புசித்த பின் தாங்கள் செய்த தவறை உணர்ந்தார்கள் நமது ஆதி தந்தையும் தாயும். பிறகு இறைவனிடம் பாவ மன்னிப்பு கோரினர்.

2:37. (பாவ மன்னிப்புக்குரிய) சில வார்த்தைகளை இறைவனிடமிருந்து ஆதம் பெற்றுக் கொண்டார். எனவே அவரை இறைவன் மன்னித்தான் அவன் மன்னிப்பை ஏற்பவன் நிகரற்ற அன்புடையோன்.

7:24 – 25 “(இங்கிருந்து) இறங்கி விடுங்கள்! உங்களில் ஒருவர் மற்றவருக்குப் பகைவர்களாவீர். உங்களுக்குப் பூமியில் குறிப்பிட்ட காலம் வரை தங்குமிடமும், வசதியும் உள்ளன“ என்று கூறினான். “அதிலேயே வாழ்வீர்கள்! அதிலேயே மரணிப்பீர்கள்! அதிலிருந்தே வெளிப்படுத்தப்படுவீர்கள்“ என்றும் கூறினான்.

2:38. “இங்கிருந்து அனைவரும் இறங்கி விடுங்கள்! என்னிடமிருந்து உங்களுக்கு நேர்வழி வரும் போது எனது நேர்வழியைப் பின்பற்றுவோருக்கு எந்த அச்சமும் இல்லை. அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள்“ என்று கூறினோம்.

2:39. “(நம்மை) மறுத்து நமது வசனங்களைப் பொய்யெனக் கருதியோர் தாம் நரகவாசிகள். அதில் அவர்கள் நிரந்தரமாக இருப்பார்கள்“ (என்றும் கூறினோம்.)

இதுதான் நாம் பூமிக்கு வந்ததன் சுருக்கமான வரலாறு!

- இங்கு நேர்வழி என்பது இறைவனின் தூதர்கள் மூலமாகவும் வேதங்கள் மூலமாகவும் நமக்கு வருகிறது. இந்த பரீட்சைக்களத்தில் வெறும் நேர்வழி மட்டும் இருந்து அதற்கு எதிரான ஒன்று இல்லாவிட்டால்

அந்தப் பரீட்சையில் அர்த்தம் இருக்காது. அதனால்தான் ஷைத்தான் என்ற ஒரு தீய சக்திக்கு இறைவன் அனுமதி கொடுத்து அவனுக்கு சில ஆற்றல்களையும் வழங்கி மனிதனை வழிகெடுக்க அனுமதியும் கொடுத்துள்ளான். யார் அவனைப் பின்பற்றுகிறார்களோ அவன் தூண்டும் சஞ்சலங்களுக்கு இரையாகின்றார்களோ அவர்கள் இந்தப் பரீட்சையில் தோல்வி அடைகிறார்கள். மறுமையில் நரகத்தை அடைகிறார்கள்.

ஆக, இந்த பரீட்சைக் களத்தில் ஒவ்வொருவருக்கும் அவரவர் பரீட்சையை முடிப்பதற்கு ஒரு குறிப்பிட்ட கெடு நிச்சயிக்கப் பட்டுள்ளது. அநீதி, அக்கிரமங்கள் நடப்பதற்கும் இதுதான் இடம். அவற்றை எதிர்த்துப் போராட வாய்ப்பளிப்பதற்கும் இதுதான் இடம்! இங்கு இறைவன் அதர்மத்தை சிலவேளைகளில் நல்லோர்களின் கரங்கள் கொண்டு அழிக்கிறான். சிலவேளைகளில் தனது தண்டனைகளான இயற்கை சீற்றங்களைக் கொண்டு அழிக்கிறான். எதை எப்போது எப்படி அழிப்பது என்பது அவன் ஆதிக்கத்துக்கு உட்பட்டது.

மனிதர்களுடைய அநீதியின் காரணமாக அவர்களை அல்லாஹ் தண்டிப்பதாக இருந்தால் பூமியில் எந்த உயினத்தையும் அவன் விட்டு வைக்க மாட்டான். மாறாக குறிப்பிட்ட காலக்கெடு வரை அவர்களைப் பிற்படுத்தியிருக்கிறான். அவர்களின் கெடு வந்ததும் சிறிது நேரம் பிந்தவும் மாட்டார்கள். முந்தவும் மாட்டார்கள். (அல்குர்ஆன் 16:61)

# மது மருந்தாகுமா?

நோய்களுக்கு மருந்தாக மதுபானத்தை பாவிக்க முடியுமா? என்ற கேள்வி சிலபோது எழுப்பப்படுவதுண்டு.

அடிப்படையில் மதுபானத்தை மருந்தாகப் பயன்படுத்துவதற்கு இஸ்லாத்தில் அனுமதி இல்லை. ஒருமுறை ஒருவர் தான் மருந்துக்காக மதுபானம் தயாரிப்பதாகக் கூறினார். அதற்கு நபி (ஸல்) அவர்கள்:
“அது மருந்தல்ல. உண்மையில் அது நோயாகும்“ என்றார்கள். (முஸ்லிம்)

மற்றொரு சந்தர்ப்பத்தில் நபியவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்:
“அல்லாஹ் நோயையும் அதற்கான மருந்தையும் இறக்கியுள்ளான். எனவே, மருந்து உபயோகிப்பீர்களாக. ஹராமானதைக் கொண்டு சிகிச்சை பெறாதிருப்பீர்களாக.“ (அபூதாவூத்)
போதைப் பொருட்களைப் பற்றிக் குறிப்பிடும் போது இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்கள்:
“அல்லாஹ் உங்களுக்கு ஹராமாக்கியவற்றில் (நோய்களுக்கான) நிவாரணத்தை அமைத்து வைக்கவில்லை“ (புகாரி)

# மனமாற்றமும் குணமாற்றமுமே இஸ்லாம்

**பிறப்பால் வருவதா இஸ்லாம்?**

இஸ்லாம் என்றால் அதன் பொருள் கீழ்படிதல் என்பது. அதன் இன்னொரு பொருள் அமைதி என்பதாகும். அதாவது இறைவனுக்குக் கீழ்படிந்து வாழ்ந்தால் இவ்வுலக வாழ்க்கையிலும் அமைதி பெறலாம். மறுமையிலும் அமைதி அல்லது மோட்சம் பெறலாம் என்பது இந்த இறைமார்க்கம் முன் வைக்கும் தத்துவம் ஆகும்.

முஸ்லிம் என்றால் கீழ்படிபவன் என்று பொருள். யார் இறைவனின் கட்டளைகளுக்குக் கீழ்படிந்து நடக்கிறார்களோ அவரகளே முஸ்லிம்கள் எனப்படுவர். ஒரு தொப்பியோ தாடியோ வைப்பதனாலோ அல்லது அரபியிலோ உருது மொழியிலோ பெயர் வைப்பதனாலோ யாரும் முஸ்லிம் ஆகி விட முடியாது. ஒரு முஸ்லிம் தாய் தந்தையருக்குப் பிறந்து விட்டாலும் ஒருவர் முஸ்லிம் ஆக முடியாது. முழுக்க முழுக்க பின்பற்றுதல் மூலமே ஒருவர் முஸ்லிம் ஆக முடியும்.

இயற்கையில் காணும் மரம, செடி, கொடி , சூரியன் சந்திரன், நட்சத்திரங்கள், மீன்கள், பறவைகள், விலங்கினங்கள்........ என இவை அனைத்தும் எவ்வாறு இறைவனின் கட்டளைகளுக்கு - அதாவது இறைவன் விதித்த விதிகளுக்கு கட்டுப்பட்டு வாழ்கின்றனவோ அவ்வாறு வாழ்தலே இஸ்லாம்! அவ்வாறு வாழ்பவரே முஸ்லிம்! ஆம், இவ்வுலகில் மனிதனைத் தவிர மற்ற அனைத்தும் முஸ்லிம்களாகவே இருக்கின்றன.

சரி, ஒரு மனிதன் எப்போது அல்லது எவ்வாறு முஸ்லிமாக முடியும்?

எப்போது மனிதன் படைத்த இறைவனை ஏற்றுக்கொண்டு அவனது கட்டளைகளைப் புரிந்து கொண்டு அதன்படி வாழத் துவங்குகிறானோ அப்போதுதான் அவன் முஸ்லிமாக ஆகிறான். அதாவது படைத்தவனோடு "இறைவா உன்னை என் வணக்கத்துக்குரியவனாக ஏற்றுக் கொள்கிறேன். நீ அனுப்பிய தூதரை ஏற்றுக் கொள்கிறேன். இன்று முதல் உன் கட்டளைகளுக்கு கீழ்படிந்து வாழ்கிறேன்." என்று ஒரு உடன்படிக்கை செய்து அதன்படி நிலைத்து நிற்கும்போதுதான் ஒரு மனிதன் முஸ்லிமாக ஆகிறான். அதாவது இறைவன் தரும் வாழ்க்கைத் திட்டத்தை ஏற்று அதன்படி வாழத் துவங்க வேண்டும்.

**அது என்ன வாழ்க்கைத் திட்டம் ?**

அதற்கு இஸ்லாத்தின் தூண்கள் என்று கூறப்படும்.

**1. கொள்கைப் பிரகடனம்**: "வணக்கத்துக்கு உரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர யாரும் இல்லை என்றும் முஹம்மது நபி அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஆவார்கள்" என்ற வாசகத்தை மனதார ஏற்று வாயால் மொழிதல்.

**2. ஐவேளைத் தொழுகை:** இந்த வாழ்க்கைத் திட்டத்தை முறைப்படி செயல்படுத்த வேண்டுமானால் நாம் படைத்தவனோடு தொடர்பில் இருக்க வேண்டும். அப்போதுதான் தீமை செய்யத்தூண்டும் மன சஞ்சலங்களும் ஷைத்தானின் ஊசலாட்டங்களும் நம்மை வழி தவறச் செய்யாது. அதற்காக விடியற்காலை, மதியம், மாலை. சூரியனின் மறைவுக்குப் பிறகு, உறங்கும் முன் என ஐவேளைகளில் இறைவன் தன தூதர் மூலமாக கற்றுத் தந்த தொழுகைகளை நிறைவேற்றுதல்.

**3. கட்டாய தருமம்:** பொருள் மற்றும் செல்வம் என அனைத்தும் இறைவனுக்குச் சொந்தமானவையே. இவை நம்மை பரிசோதிப்பதற்காகத் தரப்படுபவையே. நமக்கு தரப்படுபவற்றில் ஒரு குறிப்பிட்ட பங்கு ஏழைகளுக்கு உரியது. எனவே அவற்றை கட்டாயமாகக் கொடுத்து விட வேண்டும்.

**4. ரம்ஜான் மாத விரதம்:** திருக்குர்ஆன் இறங்கிய ரம்ஜான் மாதத்தில் பகலில் உண்ணுதல், பருகுதல், உடலுறவு இவற்றிலிருந்து தவிர்த்திருத்தல்.

**5. ஹஜ்ஜ் எனும் புனித யாத்திரை:** பொருள் வசதியும் உடல் ஆரோக்கியமும் உள்ளவர்கள் வாழ்நாளில் ஒரு முறை மக்க நகரிலுள்ள கஅபா என்ற இறையில்லத்தை தரிசிக்கச் செல்லுதல்.

மேற்கூறப்பட்ட கொள்கையும் வாழ்க்கைத்திட்டமும் யாருக்கேனும் பிடித்து இருந்து அதைப் பின்பற்ற வேண்டும் என்று அவர் விரும்பினால் யாருடைய தயவும் அங்கு தேவை இல்லை. அது அந்த மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையிலானது. ஆத்மார்த்தமாக மேற்கூறப்பட்ட கொள்கைப் பிரகடனத்தை இதயத்தில் உறுதி செய்து வாயால் மொழிந்தால் அந்த நொடியிலிருந்து அவர் முஸ்லிமாகி விட்டார். எந்த ஒரு மத குருவின் முன்னிலையோ யாருடைய சாட்சியமோ அல்லது ஒரு வழிபாட்டுத்தலத்தில் பதிவு செய்யும் அவசியமோ அங்கு இல்லை! அவர் தனது பெயரை மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியமும் கூட அங்கு இல்லை!

ஆம், இம்மார்க்கத்தை ஏற்க மன மாற்றமும் குண மாற்றமும் தவிர வேறு எந்த மாற்றங்களும் முக்கியம் இல்லை. ஆனால் ஏற்றுக்கொண்ட கொள்கையில் உறுதியாக இருக்க வேண்டும். மீணடும் படைத்தவன் அல்லாதவற்றை கடவுள் என்று சொல்வதோ கற்பனை உருவங்களை வணங்குவதோ தொழுகையை விடுவதோ தீமைகள் பக்கம் செல்வதோ கூடாது! நீங்கள் இக்கொள்கைப் பிரகாரம் எவ்வளவு காலம் வாழ்கிறீர்களோ அதுவரை மட்டுமே நீங்கள் முஸ்லிமாக இருக்கிறீர்கள் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்! அதே நிலையில் நீங்கள் மரணத்தைத் தழுவுவீர்களானால் உங்களுக்கு சொர்க்கம் உறுதி!

இறைவன் தன் திருமறையில் கூறுகிறான் :

'ஓ, இறைவிசுவாசிகளே! நீங்கள் முஸ்லிம்களாக அன்றி மரணித்து விடாதீர்கள்! '

# காத்திருக்கும் மண்ணறையும் மறுமையும்!

.

நாம் இவ்வுலகுக்கு தாய் வயிற்றிலிருந்து குழந்தையாக வெளிப்பட்டோம் என்பதையும் அதற்கு முன் கற்பத்தில் பத்து மாதங்கள் இருந்தோம் என்பதையும் நாம் நம்புகிறோம். அதே போல் இன்று வாழும் வாழ்வின் பல கட்டங்களைக் கடந்து நாம் மரணமடைந்த பின் புதைக்கப்பட அல்லது எரிக்கப்பட இருக்கிறோம் என்பதையும் நம்பத் தயாராக இருக்கிறோம். இக்கட்டங்களுக்கு முந்தைய மற்றும் பிந்தைய நம் நிலை என்ன?

இறைவேதங்களும் இறைத்தூதர்களும் பின்வருமாறு கூறுகிறார்கள்: நமது வாழ்வின் அடுத்தகட்டம் மண்ணறை வாழ்வு. அடுத்ததாக பயங்கரமான நிகழ்வுகளுக்குப் பின் உலகம் ஒருநாள் அழிக்கப்படும். அதைத் தொடர்ந்து மீணடும் இறைவன் புறத்திலிருந்து கட்டளை வரும்போது அனைத்து மனிதர்களும் மீணடும் விசாரணைக்காக உயிர்கொடுத்து எழுப்பப்படுவார்கள். அன்று நல்லவர்களுக்கு சொர்க்கமும் தீயோருக்கு நரகமும் விதிக்கப்படும். அதுதான் நமது நிரந்தர இருப்பிடமாக இருக்கும்

இவற்றை நம் புலன்களால் அறிய முடியாத நிலையில் நாம் உள்ளோம். ஆனால் நம் புலன்களுக்கு எட்டவில்லை என்ற காரணத்துக்காக அவற்றை மறுத்து விட முடியுமா? அவ்வாறு மறுப்பது என்பது பகுத்தறிவுக்கு இழுக்கு அல்லவா? புலன்களுக்கு எட்டும் தகவல்களை (***sensible data***) சேகரித்துக் கொண்டு எட்டாதவற்றை ஆராய்ச்சி செய்து அறிந்து கொள்வதைத்தான் பகுத்தறிவு என்கிறோம். அவ்வாறு ஆராயாமல் அப்பட்டமாக மறுப்பவர்களை எப்படி பகுத்தறிவுவாதிகள் என்று அழைக்க முடியும்? நம்மை மீறிய மீறிய ஒரு சக்திக்கு உட்பட்டுதான் நாம் இக்கட்டங்களைக் கடந்து வருகிறோம் என்று உணர்ந்த பிறகும் எப்படி இவற்றை அப்பட்டமாக மறுக்க முடியும்? அது மடமையல்லவா? இன்று அறிவியலும் கூட இந்த விரிவடைந்து வரும் பிரபஞ்சத்தின் பின்னால் இயங்கும் சக்தியை இருண்ட சக்தி (னயசம நநெசபல) என்று ஒப்புக்கொள்கிறது. அதை தன்னால் இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதற்காக அதை இல்லை என்று மறுக்கவில்லை. அவ்வாறு செய்வது அறிவியல் அணுகுமுறையும் கிடையாது என்பதை கண்மூடித்தனமாக நாத்திகத்தில் நீடிக்கும் நண்பர்கள் உணரவேண்டும்.

அது மட்டுமல்ல, இவற்றை மறுப்பதும் அலட்சியம் செய்வதும் நாளை நரகத்திற்கு இட்டுச்செல்லும் என்று கூறப்படும்போது இவற்றை

அப்பட்டமாக மறுப்பதும் உதாசீனம் செய்வதும் பேராபத்தல்லவா? மனிதன் பகுத்தாய்வு செய்து மறுமையை ஏற்றுக்கொள்ளும் வண்ணம் அறிவுபூர்வமான தன் வாதங்களை முன்வைக்கிறது திருக்குர்ஆன்.

● நம் கட்டுப்பாட்டில் இல்லாத பல கட்டங்களைக் கடந்து கொண்டிருக்கும் நம்மைப் பார்த்து இறைவன் கேட்கிறான்:

2:28. நீங்கள் எப்படி அல்லாஹ்வை நம்ப மறுக்கிறீர்கள்? உயிரற்றோராக இருந்த உங்களுக்கு அவனே உயிரூட்டினான் பின்பு அவன் உங்களை மரிக்கச்செய்வான் மீண்டும் உங்களை உயிர் பெறச் செய்வான் இன்னும் நீங்கள் அவன் பக்கமே திருப்பிக்கொண்டுவரப் படுவீர்கள்.

● வறண்ட பூமியின் மீது மழை நீர் பொழியும்போது அது உயர் பெற்று அதில் புதிதாக தாவரங்கள் செழிப்பதுபோல் மீண்டும் நாம் உயிப்பிக்கப் படுவோம் என்கிறான் இறைவன்.

30:24. அச்சமும், ஆசையும் ஏற்படும்படி அவன் உங்களுக்கு மின்னலைக் காட்டுவதும் பிறகு வானத்திலிருந்து மழை பொழியச் செய்து, அதைக் கொண்டு பூமியை – அது (வரண்டு) இறந்த பின்னர் உயிர்ப்பிப்பதும் அவன் அத்தாட்சிகளினின்றும் உள்ளன. நிச்சயமாக அதில் சிந்தித்துணரும் சமூகத்திற்கு அத்தாட்சிகள் இருக்கின்றன.

● உயிரற்ற பொருட்களில் இருந்து உயிருள்ளவை வெளிப்படுவதும் உயிருள்ளவற்றிளிருந்து உயிரற்றவை வெளிப்படுவதும் நம் கண்முன்னே அன்றாடம் நடக்கும் அற்புதங்கள். இருந்தும் மீணடும் நாம் உயிர்பிக்கப் படுவோம் என்று படைத்தவன் கூறுவதை நம்பாமல் இருக்க முடியுமா?

30:19. அவனே உயிரற்றதிலிருந்து உயிருள்ளதை வெளிப்படுத்துகிறான் உயிருள்ளதிலிருந்து உயிரற்றதை வெளிப்படுத்துகிறான் இந்தப் பூமியை அது இறந்தபின் உயிர்ப்பிக்கிறான் இவ்வாறே (மரித்தபின் மறுமையில்) நீங்களும் வெளிப்படுத்தப்படுவீர்கள்.

● இவ்வுலகின் சொந்தக்காரன் அறுதியிட்டு உறுதியாகச் சொல்கிறான்:

10:4. நீங்கள் அனைவரும் அவனிடமே மீண்டு செல்ல வேண்டியிருக்கிறது அல்லாஹ்வின் வாக்குறுதி மெய்யானது – நிச்சயமாக அவன்தான் முதல் முறையாகப் படைத்தவன் நம்பிக்கை கொண்டு நேர்மையான முறையில் நற்கருமங்கள் செய்தவர்களுக்கு கூலி வழங்குவதற்காக படைப்பினங்களை மீண்டும் உயிர்ப்பிப்பான். யார் நிராகரித்து விட்டார்களோ அவர்களுக்கு அவர்கள் நிராகரித்த காரணத்தினால் கொதிக்கும் நீரும் நோவினைத் தரும் வேதனையும் உண்டு.

# நபிகளாரின் பிரார்த்தனை

இறைவா! இயலாமையிலிருந்தும் சோம்பலிருந்தும் கோழைத் தனத்திலிருந்தும் தள்ளாமையிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன். மேலும், மண்ணறையின் வேதனையிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன். இன்னும் வாழ்வின் சோதனையிலிருந்தும் இறப்பின் சோதனையிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன். (நூல்: புகாரி 6367. )

## திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

**வாசகர்கள் கவனத்திற்கு...**

- இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை 9886001357 என்ற எண்ணுக்கு SMS அனுப்பவேண்டும்.
- மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் SMS மூலம் RESEND QNM என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.
- முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்பி புதுக்கிக் கொள்ள வேண்டும்.

● ஓராண்டு சந்தா : Rs. 60-    ● ஈராண்டு சந்தா Rs.120-


Published from:

**House of Peace,**

PO Box no. 1726,
No.8, 4th main, 2nd cross, LB Sastri nagar,
Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**


## திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளவும்

கோலார் தங்கவயல்: சகோ.பஷீர் அஹ்மத் 9845217262
ஓசூர் : சகோ. ர.ஃபீக் - 9994713191
தர்மபுரி: சகோ, அய்யூப் 9842627171
கோவை : சகோ. ஜுல்.ஃபிகர்-8015714648
மதுரை: சகோ. ஆதில்- 9043967747
திருப்பூர் : சகோ. ஷேக் தாவுத் - 9150068919
திருச்சி : சகோ. திருச்சி முஸ்த.ஃபா -9865446344
குன்னூர்: சகோ. அப்துல் ரகுமான் - 9843622246
சென்னை: அப்துல் அக்பர் .ஃபிர்தௌசி- 9944656942
அப்துல்லாஹ் .ஃபிர்தௌசி- 9894442844
சேலம் : சகோ. இப்ராஹீம் - 9994091364
தஞ்சாவூர்,கும்பகோணம்: சகோ. அப்துல்சலாம் - 9597285160
விழுப்புரம்: சகோ. அப்துல் கனி - 9790290002
திருநெல்வேலி: சகோ. ரி.ஃபாயி - 9840911985
ஈரோடு: சகோ. ஷேக் தாவுத் - 7373947869
மயிலாடுதுறை: சகோ. அமீர் ஹம்சா - 9942941190


Printed, published & edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, published from House of Peace, #8, 4th Main, 2nd cross, LB Sastry Nagar, Bangalore 560017 and printed at Print-O-Graph, Balaji complex, Sultanpet, Bangalore.
Registered News paper in India No.KARTAM/2007/28173

From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

Registered news paper in India No. KARTAM/2007/28173
Regd under Postal Regn. No.KRNA/BGE/1057/2012-2014
posted at MBC Bangalore GPO b/w 25th to 27th of every month. No of pages: 24+4
Licenced to post without prepayment License No.WPP-308

**(PRINTED MATTER)**

To

..........................................................................

..........................................................................

..........................................................................

..........................................................................

**உங்கள் இறைவன் கூறுகிறான் திருக்குர்ஆனில்....**



4:25. உங்களை நீங்களே கொல்ல வேண்டாம். நிச்சயமாக இறைவன் உங்கள் மீது மிகவும் அன்புடையோனாக இருக்கின்றான்.

5:90. விசுவாசிகளே! மதுபானமும், சூதாட்டமும், கற்சிலைகளை வழிபடுதலும், அம்புகள் எறிந்து குறி கேட்பதும், ஷைத்தானின் அருவருக்கத்தக்க செயல்களிலுள்ளவையாகும். ஆகவே நீங்கள் இவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் ~ அதனால் நீங்கள் வெற்றியடைவீர்கள்.

5:91. நிச்சயமாக ஷைத்தான் விரும்புவதெல்லாம், மதுபானத்தைக் கொண்டும், சூதாட்டத்தைக் கொண்டும் உங்களிடையே பகைமையையும், வெறுப்பையும் உண்டு பண்ணி இறைவனின் நினைவிலிருந்தும், தொழுகையிலிருந்தும் உங்களைத் தடுத்து விடத்தான். எனவே, அவற்றை விட்டும் நீங்கள் விலகிக் கொள்ள மாட்டீர்களா?